செய்தி வெளியீடு எண்: 111 நாள்: 11.02.2019

**செய்தி வெளியீடு**

**தொழில் நல்லுறவு பரிசு வழங்கும் விழாவில் தொழில் நிறுவனங்களுக்கும், தொழிற்சங்கங்களுக்கும் விருதுகள் வழங்கப்பட்டது**

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் ஆகியோரின் நல்லாட்சியில் தமிழ்நாட்டில் சாதகமான தொழிற்சூழலை ஏற்படுத்தும் வகையில் சுமூகமான மற்றும் இணக்கமான தொழில் உறவுகளை மேம்படுத்தி தொழில் முதலீட்டுக்கான மையமாக நமது மாநிலம் திகழ்கிறது.

தொழிலாளர் நலனும், பொருளாதார வளர்ச்சியும் ஒன்றை ஒன்று சார்ந்தே உள்ளன. மாநிலத்தின் துரிதமான தொழில் வளர்ச்சியில் பங்கு வகிக்கும் தொழிலாளர்களின் நலனை உள்ளடக்கிய தொழில் வளர்ச்சி மற்றும் முன்னேற்றமே தமிழக அரசின் கொள்கை ஆகும். அதே நேரத்தில், தொழில் முன்னேற்றத்தை ஊக்குவிப்பதும், தொழிலாளர் மற்றும் நிர்வாகத்தினரின் உறவினை மேம்படுத்துவதிலும் மாநிலத்தின் துரிதமான தொழில் மற்றும் பொருளாதார வளர்ச்சியினை நிலைநிறுத்தவதில் தொழிலாளர் துறை முக்கிய பங்கு வகிக்கிறது. தொழிலாளர்களின் பணி பாதுகாப்பு, ஊதிய பாதுகாப்பு, சமூக பாதுகாப்பு ஆகியவற்றை உறுதி செய்யவும் பேச்சுவார்த்தைகள், கலந்தாலோசனைகள் மற்றும் முடிவெடுத்தல் மூலம் விரிவான ஒருங்கிணைந்த திட்டங்களை செயல்படுத்துவதிலும் தொழிலாளர் துறை தொடர்ந்து சிறப்பாக செயல்படுகிறது. சிறந்த கட்டுப்பாடும், உயர்ந்த உழைப்பும் உடைய தொழிலாளர்களும், தொலைநோக்கும், முற்போக்கு சிந்தனையுடைய நிர்வாகங்களும் ஒன்றாக இணைந்து செயல்படுவதே சிறந்த தொழில் உறவிற்கு அடையாளமாகும்.

தொழிலாளர் நலன் சார்ந்த கருத்துக்களை உரிய தருணத்திலும் சீரிய முறையிலும் பரிமாறிக்கொள்ள மாநிலத்தில் செயல்பட்டு வரும் முத்தரப்பு ஆலோசனை அமைப்புகள் வழிவகை செய்கிறது. இதற்கு தொழிலாளர் துறையில் சமரச பேச்சுவார்த்தை மூலம் தொழிற்தகராறுகளை தீர்த்து வைத்து சுமூக முடிவு

காணுவது தலையாய பணியாக கொண்டு சிறப்பாக செயல்பட்டு வரும் மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் நடைபெறும் ஆட்சியில் 13,574 தொழிற்தாவாக்களும், 194 வேலை நிறுத்தங்களும் 37 கதவடைப்புகளும் விலக்கி கொள்ளும் வகையிலும் சுமூகமாக சமரச அலுவலர்களால் முடிவு காணப்பட்டது.

மேலும், கடந்த ஆட்சி காலத்தில் நடத்தப்பட்ட வேலை நிறுத்தங்களும் கதவடைப்பு வழக்குகளும் நமது மாண்புமிகு அம்மா அவர்களின் வழியிலான ஆட்சி காலத்தில் தான் முடித்து வைக்கப்பட்டுள்ளன.

தொழில் நல்லுறவும் தொடர்ந்த தொழில் அமைதியும் தொழில் நிறுவனங்கள் அடைய வேண்டிய இலட்சியங்கள் ஆகும். இந்நோக்கங்களை அடைய உதவும் வேலை அளிப்பவர்களுக்கும் மற்றும் தொழிற்சங்கங்களுக்கும் மதிப்பளிக்கும் வகையில் தொழில் நல்லுறவு விருதுகள் மற்றும் பண முடிப்புகள் தமிழக அரசால் வழங்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்கான தொழிலாளர்களுடன் நல்லுறவில் உள்ள சிறந்த 14 தொழில் நிறுவனங்களுக்கும், சிறப்பாக செயல்பட்ட 12 தொழிற்சங்கங்களுக்கும் தொழில் நல்லுறவு விருதுகள் வழங்கப்பட்டது.

இவ்விழாவில் மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் டாக்டர் திருமதி நிலோபர்கபில், மாண்புமிகு ஊரக தொழில்துறை அமைச்சர் திரு.பா.பென்ஜமின் விருதுகள் வழங்கி உரையாற்றினர்கள், தொழில் நல்லுறவு பரிசுக்குழு தலைவர் திரு.சம்பத்குமார் வாழ்த்துரையும், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை முதன்மைச் செயலாளர் திரு. சுனில் பாலீவால், இ.ஆ.ப., தலைமையுரையும், தொழிலாளர் ஆணையர் முனைவர்.இரா.நந்தகோபால், இ.ஆ.ப., வரவேற்புரையும், தொழிலாளர் தனிஇணை ஆணையர் திருமதி. மா.சாந்தி நன்றியுரையாற்றினார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**